DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure.)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM

| | | |
|---|---|---|
| Calender<br>Miscellaneous<br>Priliminary Register<br>Sessions | Case No | CC 11/17 |
| Deposition of witness for | Prosecution<br>Defence<br>Court | PW 2 |
| Name | | Chellammal |
| Father's Name | | |
| Village | | |
| Taluk | | |
| Caste | | |
| Calling | | |
| Religion | | |
| Age | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 20

25.06.2019 முதல் விசாரணை:

நான் செம்பட்டி கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். எதிரியைத் தெரியும். எதிரிகள் எங்கள் பக்கத்துதெருக்காரர்கள். எனது பக்கத்து வீட்டில் குடியிருந்து வருகிறார்கள். சுமார் 6 வருடத்திற்க முன்பு மாலை 3 மணிக்கு என் வீட்டில் என் அம்மா உள்ளே இருக்கும் போது எதிரிகள் செல்வம் காசிமாயன்., ஒச்சம்மாள், சோங்கம்மாள் ஆகிய 4 பேரும் என் வீட்டிற்கு வந்து என் அம்மாவை அடித்து வெளியே கொண்டு வந்து போட்டார்கள். என் அம்மா ஒரு காதில் அணிந்திருந்த தண்டட்டி ஒன்றரை பவுன் எடையுள்ளதை அறுத்து சென்று விட்டார்கள். காதிலிருந்த தண்ட்டியை அறுத்து கொண்டு சென்றுவிட்டார்கள். நான்அப்போது வீட்டிற்கு உள்ளே இருந்தேன். வெளியே வந்து பார்த்தேன். என் அம்மாவை தண்ணீர் தெளித்து மயக்கம் தெளிய வைத்தேன். உடனே காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். பின்னர் காவல் நிலையம் அழைத்து சென்றேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:

அ.சா.1 என் அம்மா ஆவார் அவர் இதற்கு முன்பு சாட்சியமளித்துள்ளார். என் அம்மா வடக்கு தெருவில் குடியிருந்து வருகிறார். நான் என் கணவருடன் என் அம்மா வீடடில் தான் குடியிருந்து வருகிறேன். சம்பவ தேதியில் நடந்த பிரச்சனைக்கு முன்பாக எங்கள் ஊர் செல்லப்பாண்டியும் காசிமாயனும் தலைவர் பதவிக்கு போட்டியிட்டர்கள் என்றால் சரிதான்.

1வது எதிரி காசிமாயன் தான் போட்டியிட்டார். அ.சா1. என் அம்மா செல்லப்பாண்டிக்கு வேலை பார்த்தார். எதிரிகள் அந்த தேர்தலில் தோற்றுவிட்டார்கள். என்றால் சரிதான். அ.சா1. என் அம்மாவிற்கு வீட்டிற்குள் தான் அடிபட்டது, என் அம்மா என் வீட்டிற்கு வரும் போது கோவில் அருகில் தான் தகராறு என்றால் சரிதான். நான் என் கணவர் என் அம்மா ஆகியோர் என் வீட்டில் இருந்ததாக போலிசாரிடம் தெரிவித்தேன் என்றால்ச ரிதான். என் அம்மாவிற்கு அடி பட்ட போது நான் வந்து பார்த்தபோது என் அம்மா வெளியில் கிடந்தார். எப்போது வந்தார் எப்போது அடிபட்டது என்று எனக்கு தெரியாது, என் அம்மா விட்டில் மொத்தம் 4 அறைகள் உளளது. என் அம்மா வாசலுக்கு அருகில் உள்ள அறையில் இருநு்தார். நான் நடு அறையில் இருந்தேன். அப்போது 10, 50 பேர் கூடிவிட்டார்கள். அவர்களுக்கு சம்பவம் பற்றி தெரியும். காவல் நிலையம் சென்ற போது என் அம்மாவை மயக்கத்தில் தான் அழைத்து சென்றோம். என் அம்மா தான் புகார் கொடுத்தார். என் அம்மா தான் மயக்க நிலையில் புகார் கொடுத்தார். அவர் சொன்ன விபரங்கள் அனைத்தும் சரிதான். நான் புகார் எதுவும் கொடுக்கவில்லை. நான் போகும் போது காவல் நிலையத்தில் தண்டட்டி இருந்தது. யார் கொடுத்தார்கள் என்று தெரியாது, தெய்வம் என்பவர் கொடுத்ததாக தெரிந்து கொண்டேன். சோங்கம்மாள் விட்டில் தண்டட்டியை போலிசார் கைப்பற்றியதாக சொன்னால் அது தவறு. போலிசார் என்னை காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள். தண்டட்டியை காவல் நிலையத்தில அடையாளம் காட்டியதாக போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சரிதான். தண்டட்டியை போலிசார் எங்கும் கைப்பற்றவில்லைஎன்றும் காவல் நிலையத்தில் வைத்திருந்தனர் என்றால் சரிதான். காசம்மாள், ஒச்சம்மாள், செல்லம்மாள், கணேசன், கருத்தக்கண்ணன் ஆகியோர் எனக்கு உறவினர் என்றால் சரிதான். ஜெயக்கொடி என் அண்ணன், தங்கராமன், ஆகியோர் எனக்கு உறவினர். நான் சம்பவத்தை பார்க்கவில்லைஎன்றும் என் அம்மாவை அன்றைய தேதியில் எதிரிகள் அடிக்கப்பட்டு தண்டட்டி அறுக்கப்படவில்லை என்றும் நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றும் நான் பாாக்கவில்லை என்ற விபரத்தை தான் போாலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றும் தேர்தல் முன்விரோதத்தை காரணம் காட்டி எதிரிகள் மீது பொய் புகார் போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.